த.அஜந்தகுமார்

# ஒரு சோம்பேறியின் கடல்



S. Puveetha.

S. Puveetha

Puveetha. S

Puveetha.

Puveetha

# ஒரு சோம்பேறியின் கடல்

த.அஜந்தகுமார்

ஊர்கூடித் தேர் இழுப்போம்
அம்பலம்

| | |
|---|---|
| தலைப்பு | : ஒரு சோம்பேறியின் கடல் |
| ஆசிரியர் | : த.அஜந்தகுமார் |
| உரிமை | : பதிப்பாசிரியருக்கு |
| பக்கங்கள் | : XII + 78 பக்கங்கள் |
| முதற்பதிப்பு | : நொவெம்பர் 2009 |
| அச்சாக்கம் | : நோபிள் பிறிண்ரேர்ஸ், 545, பருத்தித்துறை வீதி, நல்லூர். |
| அட்டை வடிவமைப்பு | : பா.அகிலன் |
| அட்டைப் பட அச்சாக்கம் | : ஹரிகணன் பிறிண்ரேர்ஸ் |
| வெளியீடு | : அம்பலம் குழுமம் |
| விலை | : 200/= (இலங்கை ரூபாய்) |

## கையுறை

வறுமையிலும் தளராது
இயல்புக்கு மிஞ்சி என்னைப்
பொறுமையுடன் படிப்பித்து
ஆளாக்கி வரும்
என்னினிய அம்மா த.கமலாதேவிக்கும்
அப்பா சி.தருமராசாவிற்கும்
அன்புடன்.

# சோம்பல் முறித்துச் சில சொற்கள்

நான் 2000 ஆம் ஆண்டில் இருந்து கவிதை எழுதி வருகின்றேன். ஆனால் கவிதை எனக்கு இன்னும் வசப்பட்டுவிடவில்லை. அப்பொழுது எழுதிய கவிதைகள் வெறும் வார்த்தைக் கோலங்களாய் இப்பொழுது உறுத்துகின்றன. பாடசாலைக் காலத்தில் நான் கற்ற நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத் தமிழ்மொழித்தினக் கவிதைப் போட்டி ஒன்றில் நான் கிறுக்கிய கவிதை ஒன்றின் மூலம் என்னை இனங்கண்டு கொண்ட பின்னர்தான் எனக்குள் ஒரு கவிஞன் இருப்பதை உணர்ந்தேன். பாடசாலை ஆசிரியர்கள், அதிபர், சகமாணவர்களின் ஊக்குவிப்பும் பாராட்டும் என் கவிதைப் பயணத்தைத் தொடரவைத்தது. பாடசாலைக் காலத்தில் எனக்குள் கவிதைப்பைத்தியம் பெருகி என்னை உலைக்கத் தொடங்கியிருந்தது. என் பெயர் வரவேண்டுமென்ற வெறியில் பத்திரிகை களுக்குத் தொடர்ந்து எழுதியபடியே இருந்தேன். பாடசாலைக் காலத்திலேயே நூற்றுக்கு மேற்பட்ட கவிதைகள்(?) பத்திரிகைகளில் என் பெயர் சுமந்து வெளிவந்தன. நல்லூர்த் திருவிழா,

நவராத்திரி, புத்தாண்டு, தீபாவளி எப்போது வருமென்று என் கவிஞன் காத்துக் கிடந்தான். அக்காலத்தில் புதிதாக ஒரு சொல் எனக்குக் கிடைத்தாலே போதும். அதனோடு பொருந்தும் எதுகை, மோனைகளோடு கவிதை படைத்து விடுவேன். இப்போதும் சொற்களின் மீதான பித்தும் பிரியமும் பெருகியபடியே இருக்கிறது. சொற்கள் ஒரு பாற்கடலாய் என் முன் விரிந்து அலையெறிந்தபடியே இருக்கின்றன. என் அனுபவ உடலோடு அதில் இறங்குகையில் இனம்புரியாப் பரவசம் என்னை ஆட்கொள்கிறது. மீண்டு வருகையில் குளித்து முடித்த பின் எஞ்சும் நீர்த்துளிகளாய் சில சொற்களே என்னோடு எஞ்சுகின்றன. நானும் என் அனுபவங்களும் சொற்களோடு போராடித் தோற்றபடியே திரும்ப வேண்டியிருக்கிறது. எனினும் சொற்களின் யாசகனாய் என் அனுபவங்களோடு தொடர்ந்த படியே இருக்கிறேன். என் இயலுமைக்கு எட்டிய கவிதைகளில் சிலவற்றை இப்போது ஒன்றாய்க் கோர்த்து உங்களிடம் தருகின்றேன்.

இதிலுள்ள கவிதைகள் பெரும்பாலும் 2004 - 2009 காலப்பகுதியில் எழுதப்பட்டவை. என் பல்கலைக் கழக வாழ்வுக் கவிதைகள் என்று கூடச் சொல்லலாம். தன்னுணர்ச்சிக் கவிதைகளாயே பல கவிதைகள். 'பாட்டுத்திறத்தாலே வையத்தைப் பாலித்திடும்' கவிதைகள் அதிகம் இல்லையே என்று என்னில் சிறுமை கண்டு சிலர் பொங்கலாம். என் துயர் - மற்றவன் துயர், என் துயர் - சமூகத்தின் துயர் என்று நம்புபவன் நான். சபிக்கப்பட்ட இனத்தின் ஒருவனாகிய நான் அடையும் துயரூறும் கணங்களும் ஏக்கங்களும் இன்னும் பிறவும் இச்சமூகத்தில் இருந்து வந்ததுதான். என் கவிதைகள் தனியே தன்னுணர்ச்சிக் கவிதைகள் என்று சொல்லுவதில் எனக்கு உடன்பாடு இல்லை. மக்ஸ் வெபர் (*Max weber*) கூறியதுபோல், 'தனிமனித விடுதலையில் இருந்துதான் சமூகவிடுதலை' என்ற எண்ணம் எனக்குள். 'தனியொருவனுக்கு உணவிலையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாரதி பாடியதும் அதனாற்தான் போலும்.

பல துயரங்களை அவலங்களை என் மொழியில் எழுதிவிட முடியவில்லை. நான் மொழியோடு தோற்ற கணங்களே அதிகம். இறுதிப் போரை, 'அவலம் ஈதென எழுதிய படிவமொத்து எய்திய' வன்னி மக்களின் துயரூறும் கணங்களை, அவர்களின் முகாம் வாழ்வை ஒரு செய்தியைப்

போல் என்னால் உடனடியாக எழுதிவிட முடியவில்லை. வாய் பேசவோ, காது கேட்கவோ முடியாத என் தந்தை- ஒரு நடுச்சாமத்தில் என்னைப் பார்த்து, 'ஏன் என்னால் கதைக்க முடியவில்லை? ஒன்றும் கேட்குதில்லை' என்று மிகப்பரிதாபமாகக் கைகளின் சைகையால் வினாவினார். நெஞ்சடைத்து, கண்பனிக்கப் பதிலேதும் தெரியாமல் மௌனித்தேன். அவர் விரல்களின் மொழி என் கண்களுள் இறங்கி நெஞ்சுள் பாரமாய்ப் பரவி இப்போதும் கனக்கிறது. ஆனால் என் துயரை மொழியில் அப்படியே இறக்கிவிட முடியவில்லை. எழுதப்பட்ட கவிதைகளை விட எழுதப்படாத கவிதைகளே அதிகம்.

என் ஆரம்பகாலக் கவிதைகளுக்கும் இப்போது எழுதும் கவிதைகளுக்கும் இடையில் ஒரு பள்ளத்தாக்கே இருக்கிறது. என் கவிதைப் பயணத்தின் தொடக்கத்தையும் தொடர்ச்சியையும் இத் தொகுப்பில் இனங்காட்ட நினைத்தேன். எனினும் அம்முயற்சி கைகூடவில்லை.

க.பொ.த (உயர்தர) பரீட்சை முடிந்ததும் 2003 இன் நடுப்பகுதியில் என் நண்பர்கள் சிலருடன் சேர்ந்து 'புதிய தரிசனம்' என்ற கலை இலக்கிய ஏட்டை வெளியிட்டு வந்தேன். அவ்விதழ் இலக்கிய உலகில் அதிகம் சாதிக்காமல் 5 இதழ்களோடு

மௌனித்த போதிலும் அதனால் எனக்கு வந்த அடையாளமும் இலக்கிய உறவுகளும் ஏராளம் என்பேன். இதழ் வெளியீடே என்னை ஒரு தீவிர வாசகனாக மாற்றியது. தமிழில் நவீன இலக்கிய வடிவங்கள் எல்லாவற்றுடனும் வாசகப்பரிச்சயம் கொண்டேன். 2004 இல் எனக்கு வாய்த்த பல்கலைக்கழக வாழ்வும் அறிவுலகத் தொடர்பும் என்னை விசாலிக்க உதவிற்று. ஒரு வாசகனாய் என்னுடைய கவிதைகளை இப்போது பார்க்கையில் அதிக திருப்தி ஏற்பட வில்லையாயினும் எனது எழுத்துலக அனுபவத்தைத் தொகுப்பாக்க வேண்டும் என்ற என் கனவு மெய்ப்படவே இம்முயற்சி.

பல்கலைக்கழகம் புகுந்தவுடன் ஒரு கவிதைத் தொகுப்பே என் கனவாக இருந்தது. ஆனால் பல்கலைக்கழக மாணவப்பருவம் முடிந்த பிறகே தொகுதி சாத்தியமாகி இருக்கிறது. என்னுடைய தொகுதி வெளிவரவேண்டும் என்பதில் நண்பர்கள் சி.திருச்செந்தூரன், ந.வினோதரன், க.பரணீதரன், வெ.துஸ்யந்தன் ஆகியோரும் என் விரிவுரை யாளர்களும் ஆர்வம் காட்டினர். அம்பலம் குழுமத்தினது தொடர்பு - குறிப்பாக த.பிரபாகரன், கு.லக்ஷ்மணன் ஆகியோரின் தொடர்பும் அன்பும் -அவர்களது வெளியீடாய் இத்தொகுப்பைச் சாத்திய மாக்கியுள்ளது.

இலக்கியம் பற்றிய பிரக்ஞையை பாடசாலைக் காலத்தில் ஊட்டி என்னை உருவாக்கிய கந்தசாமி ரீச்சர், சோதி ரீச்சர், குப்பிழான் ஐ.சண்முகன், இரா.அகிலன், இ.இராஜேஸ்கண்ணன், அதிபர்கள் சி.சிற்றம்பலம், செ.சேதுராஜா ஆகியோரும், என்னைப் புடமிட்ட தமிழ்த்துறையும் -

இத்தொகுதியில் உள்ள கவிதைகள் தொடர்பாக என்னுடன் வாதித்து கருத்துகளைப் பகிர்ந்து கொண்ட எனது விரிவுரையாளர்கள் க.அருந்தாகரன், ஈ.குமரன் மற்றும் சு.குணேஸ்வரன், ந.மயூரரூபன், அம்பலம் குழுமத்தினர் -

இத்தொகுதியின் பின்னட்டைக் குறிப்பினை கேட்டவுடன் எழுதித் தந்த என் மதிப்பிற்குரிய பேராசிரியர் ம.இரகுநாதன்-

அட்டையினை வடிவமைத்துத் தந்த மதிப்பிற் குரிய விரிவுரையாளர் பாக்கியநாதன் அகிலன் -

நான் தமிழ்த்துறையில் உதவி விரிவுரையாளனாக நியமனமானது முதல் 'உன்ரை தொகுதியை வெளியிடு' என்று அன்புரிமையுடன் வலியுறுத்திய தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, கலாநிதி கி. விசாகரூபன், -

வலம்புரிப் பத்திரிகைதான் என் முதற்கவிதையைப் பிரசுரித்தது. அதற்கும், என் கவிதைகளைப் பிரசுரித்த பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணைய

இதழ்கள் - இணையத்திற்கு என் கவிதைகளைக் கொண்டு சென்ற பிறின்சன் -
இத்தொகுதியை வெளியிடும் அம்பலம் குழுமம் -
என்னைச் சிறு வயது முதல் ஆற்றுப்படுத்தி வரும் பொறியியலாளரும் ஊற்று நிறுவனப் பணிப்பாளருமான பொ. விக்கினேஸ்வரன் -
இதனைக் கணினியில் தட்டச்சு செய்து தந்த தமிழ்ப்பூங்கா அச்சக கு. மஞ்சுளா, வடிவமைத்துப் பதிப்பிக்கும் நோபிள் பிறிண்ரேர்ஸ், அட்டையைப் பதிப்பித்துத் தந்த ஹரிகணன் பிறிண்ரேர்ஸ் -
ஆகிய எல்லோருக்கும் நான் கடமைப்பட்டவன். அவர்கள் எல்லோருக்கும் என் நன்றி உரித்தாகுக.

இத்தொகுதி தொடர்பான விமர்சனங்களை மிகுந்த ஆர்வத்துடன் வரவேற்கின்றேன்.

அன்புடன்,
த. அஜந்தகுமார்
21.10.2009

யார்வத்தை,
வதிரி,
கரவெட்டி.
ajanthant84@yahoo.com

# ஈன்றெடுத்தலின் கணங்களில்.........

ஈன்றெடுத்தலின் இன்னொரு கணமொன்றில் த.அஜந்தகுமாரின் 'ஒரு சோம்பேறியின் கடல்' கவிதை நூற்பிரதி அம்பலத்தின் வெளியீடாக வந்திருக்கிறது. பதிப்பு முயற்சிகள் எவ்வளவு சுமையானவையோ அதே அளவிற்குச் சுகத்தினையும் உண்டாக்கக்கூடியவை. ஒவ்வொரு பதிப்பிற்கும் நிறையவே உழைக்க வேண்டியிருக்கிறது.

வாசிப்புப் பாரம்பரியம் நமது சமூகத்தை விட்டு மிக நீண்ட இடைவெளிக்கப்பால் தொலைந்து கொண்டிருக்கின்ற நாட்களில் நூல்களை வெளிக்கொணர்தலும், விநியோகித்தலும் பகீரதப் பிரயத்தனமான விடயங்கள்தான். ஆயினும் இலக்கியங்கள் மீது கொண்ட நேசிப்பாலும் புதிய தளத்தினை நோக்கிய விடாப்பிடியான பயணிப்பாலும் சோர்வினையும், சுமைகளையும் புறந்தள்ளிவிட்டு அம்பலத்தின் பதிப்பு முயற்சிகள் தொடர்கின்றன. இனிவரும் நாட்களில் இன்னும் பல புதிய படைப்பாளிகளின் பிரதிகளை நூலுருவாகக் கொண்டுவருவதற்கான முயற்சியில் அம்பலம் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. அம்முயற்சிகள் ஒவ்வொன்றுமே தமிழ் இலக்கியப் படைப்பாக்கச் சூழலுக்குப் பலம் சேர்ப்பனவாகவே அமையும்.

தனது உதிரிக் கவிதைகள் மூலம் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றினூடாகத் தன் மீதான தனித்துவ அடையாளத்தைக் கோரிநின்றவர் த.அஜந்தகுமார். கவிதை மட்டுமல்லாது இலக்கியத்தின் ஏனைய வடிவங்கள் மீதும் ஈடுபாடு கொண்ட படைப்பாளி. அவரின் முதல் தொகுதியான 'ஒரு சோம்பேறியின் கடல்' அம்பலத்தின் இரண்டாவது வெளியீடாக வருவது எமக்கு மட்டற்ற மகிழ்வை உண்டு பண்ணுகின்றது. எமது முதலாவது பதிப்பு முயற்சிக்கு கிடைத்த அதேயளவு ஆதரவும், பலமும் இத்தொகுதிக்கும் கிடைக்குமென நம்புகின்றோம். இந்தப் பிரதியை ஈன்றெடுக்க எம்மோடு கூடவே பயணித்த அனைவருக்கும் நன்றிகள்.

"ஊர் கூடித் தேரிழுப்போம்"

அம்பலம் குழுமம்
41, இராஜவீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
இலங்கை.
*ampalam 2009 @gmail. com*

பதிப்பாசிரியர்கள்
த.பிரபாகரன்
கு.லக்ஷ்மணன்

ஒரு சோம்பேறியின் கடல் 01
சும்மா இருக்கிறேன் 03
புதிர்ப்பொழுதுகளும் வாழ்வும் 05
ஞாபகங்களின் அச்சக்கோடுகள் 07
பாசி படிதல் 08
புள்ளியின் கிறுக்கல் 10
மயிர்கொட்டியும் வண்ணாத்துப் பூச்சியும் 12
உன்னை வினாவுதல் 14
கத்திக்கொண்டிருக்கும் பூனை 16
எதிர்காலம் குறித்து 18
நீண்ட காத்திருப்பு 20
சிறகில்லா வாழ்வில் செல்லல் 22
சொற்கள் பற்றிய இரண்டு கவிதைகள் 24
பல்லி + வீடு + நான் + அவள் 26
எனக்கான விசேட ஒளிபரப்பு 29
உன் தவறும் என் சக்தியும் 31
மழை எழுதிய எதிர்வினை 33
அகால மரணத்தின் வாசல் 35
ஒரு தேவதையின் ஒளிக்கவிதை 38
வீரம் குறித்த ஒரு கேள்விக்குரல் 40
மறந்து போனேனா...? 42
நிர்வாணத் தெருவும் கவிஞனின் வலியும் 43
வல்லமையைச் சந்தேகித்தலாய வல்லமை 45
என்னிலிருந்து வெளியேறும் ஒருவன் 47
இழை பிரிந்த மௌனங்களின் கதைச்சித்திரம் 49
காதல் வழிப்போக்கனோடு நடந்துவரும் இயற்கை 51
அநிச்சயக் கோடுகளில் உதிரும் புன்னகைகள் 53
நிலைத்தலின் பாங்கு 55
கானலின் குறிப்பு 57
உருக்குலைந்த என் கவிதைகள் 58
நாங்கள் பிறத்தலாய நாடகம் 60
என்னுள் நவீன ஓவியம் 62
ஒளிப்பிழம்பை வினாவுதல் 64
கனவுகளின் மூலப்பிரதி 69
புன்னகைகளின் விஷங்கள் 71
நீயெனக்கு இல்லையென்றான இந்த இரவு 73
ஈக்கள் கலந்த ஒரு கோப்பைத் தேநீர் 76
ஆர்ப்பரிக்கும் என் கடல் 78

# ஒரு சோம்பேறியின் கடல்

கடற்கரை மணலுள்
புதைந்து
திமிறி நடக்கும்
கால்கள்,
நீ என் கைபிடித்தபடி
ஓடுவது போல்
பாய்ந்து பாய்ந்து நடக்கிறாய்!

நீ முன்னேயும்
கொஞ்சம் நான் பின்னேயும்
நடக்கிறோம்.
விரிந்து கிடக்கும் கடல்;
வா என்று
ஓடிவந்து கால் தழுவி
நக்கி நனைக்கும் அலைகள்!

நீ இப்போதென்
மார்புள் புதைந்து
உயிர் தடவுகிறாய்
நான் கடலைப்
பார்த்தபடியே இருக்கிறேன்
என் நெஞ்சுக் கூட்டுக்குள்



- த.அஜந்தகுமார்

2

நெருங்கித் தூங்கும்
ஒரு கனவின் காதை;
என்னைத் தட்டி
தன்னை எழுதும்படி
சொல்லிக் கொண்டிருக்க,
சுரணையின்றி
கண்ணை மூடுகின்றேன்
நீ என் நெஞ்சுமயிர் எண்ணுகிறாய்.

திண்ணை.கொம்
*25-09-2008*

# சும்மா இருக்கிறேன்



ஞாபகச் சிதைவுகள்
என்னில் இருந்தே என்னை
வேறுபடுத்தின.
புள்ளிகளில் இருந்து
வடிவங்கள் தோற்றமாகி
புள்ளிகளே பிறகு....
வடிவங்களையும் தோற்றடங்க வைக்கிறது

எதிலுமோர் நிழலின் தோற்றம்
தவிர்க்க முடியாதபடி எழுதப்பட்டு விடுகிறது.
நிழலுக்கும் நிஜத்துக்குமான
இடைவெளிச் சுருக்கம்
ஏதோவொரு மாயையைச் சிருஷ்டித்து
உண்மையைப் பதுக்கிவைத்திருக்கிறது

முயற்சி ஏணியில் ஏறும்போது
சறுக்கும் பொழுதுகள்
நிமிர்விற்கான ஒத்திகைகளோடும்
உண்மை நிமிர்விற்கான பொழுதுகளோடும்
சேர்த்தென்னைத் தின்று கொண்டிருக்கின்றன.

- த.அஜந்தகுமார்

4

நிமிர்வதற்கான அவகாசம் சிறிதெனினும்
நான் நிமிர்ந்தே ஆகவேண்டும்!

எங்கெங்கோ அலையும் மனதை
ஆசுவாசப்படுத்தி அமர்த்தி
சேமித்த செய்திகளை
மெல்ல மெல்லமாய் அறிவித்தேன்
ஆனால் மனமோ கேட்கேன் என்று
அதிகமாய் அடம்பிடித்தபடி
வேறு சிறகுகளைப் பொருத்தியபடி
பறந்து கொண்டிருக்கிறது
நான் என்ன செய்வேன்?
இனியும் முயல்வதற்கு என்னால் முடியாது

இப்போ சும்மா இருக்கிறேன்
சுவாசித்துக் கொண்டு மட்டும்!

தாயகம்
ஜனவரி - மார்ச் 2005

# புதிர்ப் பொழுதுகளும் வாழ்வும்

5

எனதிருப்பின் நிர்ணயங்கள்
நிர்வாணப்படுத்தப்படலாயிற்று.
எனதிருப்பின் நிர்மூலம் குறித்த மூலம்
எங்கென்று தேடலுறும் திடத்தோடு
என் ஆத்மா அவதியுற்று
அலைந்து திரியத் தொடங்கிற்று.

நானிழக்கும் சுயங்களின் முகவரிகள்
ஏனிழந்து போகின்றன என்றறிய முடியாது
திணறும் கணங்களே
எனக்குச் சமர்ப்பணமாயிற்று.
வானிடிந்து வீழும் கணம்போலே
நானும் நசுங்கிக் கிடந்து
நலிவுறுதல் தொடர்கிறது
எனினும்....
நம்பிக்கை, தூரத்துறவிலிருந்து
விலகும் வரம் கேட்டபடியிருக்கிறது

என்ன செய்வதென்றறியாது

- த.அஜந்தகுமார்

6

ஏங்கும் பொழுதுகளோடே என் வாழ்வின்
சின்ன வட்டமும்
சிதைந்தழிந்து போமோவென்று
துயரொன்று படர்கிறது.

இன்னுமின்னுமாய்
என்ன செய்வதென்றறியாத
புதிர்ப்பொழுதுகளைத் திணித்தே
போய்க்கொண்டிருக்கிறது வாழ்வு.

*10-12-2004*

வெள்ளிநாதம்

# ஞாபகங்களின் அச்சக்கோடுகள்



நிழல்கள் அச்சுறுத்துகின்றன

கனவின் கோரமுகம்
பாயை விறாண்டும் பூனையாய்
என்னை விறாண்டுகிறது

விறைக்கும் மண்டையிலிருந்து
புகைத்துப்படியும்
அச்சக் கோடுகளால்
ஞாபகங்களின் பயங்கரம்

எப்போதுமான போரின் ஞாபகங்கள்
அச்சத்திலேயே உறைகின்றன

எனது இரகசியங்களின்
திசைவழிப் பயணங்களை
பிசைந்தபடி செல்கிறது
இருளின் கரம்!

கலைமுகம்
ஜூலை-டிசெம்பர்2007

- த.அஜந்தகுமார்

## பாசி படிதல்



சூரியனின் முன்
அவிழ்ந்து விழுகிறது
ஒளிமுகத்து ஒப்பனைகள்

புதிரெறிந்து என்னோடு உலாவுகிறது
நிழல்களின் நீட்சி

ஓர்மம் வடிந்து
ஒன்றிலும் ஒன்றாது
ஒடுங்குகிறது வாழ்வு வட்டம்
ஒரு சிறு புள்ளியாய்....!

நிலையற்றதென்றறிந்தும்
நிலைக் கண்ணாடிமுன்
விம்பம் பார்த்துச் சிரிக்க முயல்கிறது
பிரேமையின் பின்னலிட்ட
எந்தன் உருவம்.

துயரின் நிலைத்த வாழ்வில்

பெயர்ந்திடா அதன்
தன்மையின் பலத்தில்
பின்னடைந்துபோய்
அழுகிறது கண்!

அலையின் ஆர்ப்பரித்த சிரிப்பு
துயரின் துயரான துயரில்
வளைகிறது வாழ்க்கை!

கடலின் ஆழத்தில்
ஏதோவோர் மூலையில் கிடந்து
பாசி படிகிறது நம்பிக்கை.

மல்லிகை
ஜூன் - 2005

## புள்ளியின் கிறுக்கல்



ஒரு புள்ளியில்
வசிக்கும்
எனது நிரந்தரம்
தன் கை கால்களை நீட்டி
வடிவங்களுக்குத் 'தலை' கொடுக்க
களைத்து வியர்த்து ஓடித் திரிகிறது

சுயத்தின் தற்கொலை
சொல்ல முடியா
மொழிகளின் உடலில்
நடந்தபடி இருக்கிறது

காவித்திரியும்
சுமைகளின் கனவை
எச்சில் விழுங்கி விழுங்கி
மனம் ஒப்புவிக்கிறது

எனது சங்கடங்களின் தருணங்களில்
தொண்டைக்கும் நெளியும் புழுக்கள்

மலத்துடன் என்றாலும்
வெளியேறாததன் காரண உண்மை
புள்ளியின் தலைக்குள்
புதைந்து கிடக்கிறது.

11

கலை முகம்
ஜனவரி - ஜூன் 2006

- த.அஜந்தகுமார்

# மயிர்கொட்டியும் வண்ணத்துப்பூச்சியும்



வகுப்பறையில்
வண்ணத்துப் பூச்சி அமர்ந்திருந்தபோது
அதன் சிறகுகளில் இருந்து
வானில் விரியத் தொடங்கினேன்

என் கனவுகளின்
பச்சைப் பசேலென்ற
ஞாபகக் குவியலை
குப்பையென்று
கொட்டவும் எரிக்கவும்
அம்மா படும் பிரயத்தனம் கண்டு
கொடுப்புக்குள் சிரித்துக்கொண்டு
கரைகின்றேன்,
வண்ணத்துப் பூச்சியின் சிறகுகளை
ஒளித்துக்கொண்டு!

நடுச்சாமத்தில்
வண்ணத்துப் பூச்சி பற்றிய
மயக்கத்தின் நீண்ட தெருவில்
கிடந்து உருண்டபடி

எழுதிய கவிதை
காலையில் காணாமல் போயிருந்தது

எங்கே போனது அதுவென்று
தேடிக் களைத்துப் புலம்பியபோதுதான்
மயிர்கொட்டி ஒன்று
அந்தக் கவிதைக் காகிதத்தில்
ஊர்ந்து கிடந்ததாயும்
அதை நசித்து வீசி எறிந்ததாயும்
கன்னத்தில் குழிவிழ
சிரித்துக்கொண்டு சொன்னாள் அம்மா.

பின்வளவு
வெற்றிலைக் கொடியருகே
பிய்ந்து கிடந்தன
வண்ணத்துப்பூச்சியின் செட்டைகள்.

கலைமுகம்
ஜனவரி - ஜூன் 2006

## உன்னை வினாவுதல்



நீயில்லாத் தெருக்களின் முகத்தில்
முழிக்கவிடாது
சங்கடங்கள்
என்னைச் சரிக்கிறது

கோபத்தோடு உன்தெரு
காறி உமிழும் புழுதி
வியர்வை முகத்தில்
ஆக்கினை செய்கிறது!

ஊர்க்கோழிகள்
கிண்டிக் கிளறிய
குப்பைகளைக்
காற்று காவித்திரிகிறது

எழுதாத என் கவிதைக்கான
விமர்சனத்தை
தெருப்புழுதிகள்
சேர்ந்தெழுதி ஆரவாரிக்கின்றன

எனது எதிர்வினைகள்
பலங்குன்றிச் சோம்பிக் கிடக்கின்றன
நான் எழுத நினைத்த கவிதை
எழுதப்பட்டதான
உனது விமர்சனம் முன்
உன்னை ஒன்று கேட்பேன்,

'என் செத்தவீட்டுக்கு
நீயேன் வரவில்லை?'.

*06-11-2005*
*உதயன்*

# கத்திக்கொண்டிருக்கும் பூனை



நடுச்சாமம் ;
திடுக்கிட்டு விழித்தேன்
என்னைத் தட்டி எழுப்பிய திமிரோடு
கத்திக் கொண்டிருந்தது பூனை.

பசியாலோ குட்டி ஈன்றதாலோ
இருக்கப்படாத வியாதியாலோ
அது கத்திக் கொண்டிருக்கலாம்

படுத்திருந்தபடியே
கலைத்துப் பார்த்தேன்
ஆத்திரம் தாங்காமல்
தலையணையைத் தூக்கி
அதன்மேல் எறிந்தேன்
கொஞ்சம் அதிகமாய்க் கத்திவிட்டு
கொஞ்சத்தூரம் ஓடிவிட்டு
மீண்டும் வந்து கத்திக் கொண்டிருந்தது.

செல்லடியே தாலாட்டாய்
மாற்றங் கண்ட புத்திரனல்லவா?
நான் தூங்கிப்போனேன்



காலையில் தூக்கம் விட்டெழுந்தேன்
இப்போதும் கத்திக் கொண்டிருக்கிறது பூனை.

*11-02-2005*
வெள்ளிநாதம்

# எதிர்காலம் குறித்து....



வாழ்வுக்கான வேர்கள்
உன்வசமே ஊன்றியுள்ளன
புடைத்து வளரும் விருட்சம்
உன் வேரில் இருந்து விடுபடின்
வாட்டம் கண்டு வீழும் என்பதை
நீயறிவாயோ எந்தன் உயிரே!

உன்னுள்ளே
வளரும் வேர்கள் குறித்த
என் கவிதைகள்
உன் வாசிப்பிற்குக் கிட்டாது
நழுவியது குறித்ததான
என் கவலைகள்,
பிரபஞ்ச வெளியை
நிறைத்துக் கிடக்கின்றன

நீ இன்னும் எதுவும் அறியாததால்
உன்னுள் ஊன்றியிருக்கும்
என் வேர்கள் குறித்தோ

என்னுள் வளரும் விருட்சம் குறித்தோ
அறிவதற்கு வாய்ப்பில்லை

நீ அறிந்த பின்னரான
வேர்கள் குறித்ததும்
விருட்சம் குறித்ததுமான
என் சிந்தனைகள்
எதிர்காலம் நோக்கி ஓடிப்போய்
யோசித்தபடி விழித்திருக்கிறது.

*03-07-2005*

ஞாயிறு தினக்குரல்

# நீண்ட காத்திருப்பு



விம்பங்கள் என்முன்
பிரத்தியட்சமாகி
என் ரூபத்தையே எனக்கு
அந்நியமாக்கின

விம்பங்களின் பின்னலுக்குள்
நான் நொய்ந்து போன
வரலாறு மட்டுமே
வடிக்கப்படப் போகிறது

துடித்து நான் எழுந்து
எனை வெளியிழுக்க முடியாதளவுக்கு
ஏதோவோர் கட்டெடன்னுள் விழுந்துள்ளது

யாவையும் உடைத்தெறியும்
உத்வேகம் நொருங்கிப்போன
இருட்டுச் சூழலில்
ஒரு சிறு பொறி வெளிச்சத்துக்கான
எனது காத்திருப்பு நீண்டு விரிகிறது.

காத்திருத்தல்
கானலென்ற உண்மையைக்
கணங்கள் ஒவ்வொன்றும்
கதை கதையாய்ச் சொன்னாலும்
நம்பிக்கை மட்டும் சிதையாது தேங்கிற்று.

நம்பிக்கை நிரப்பி
நீண்ட பொழுதுகளாய்
எந்தன் தவமிருத்தல் நீள்கிறது.

*08-04-2005*

வெள்ளிநாதம்

## சிறகில்லா வாழ்வில் செல்லல்



பறப்பதற்குத் துடிக்கின்றன
எனது சிறகுகள்!

எல்லா திசைகளையும் திறந்தபடி
உயர உயரப் பறக்கத்
தீரா விருப்பங்கள் தினமுயிர்க்கின்றன

வாழும் சூழல்
என்னை அமத்திப் பிடித்து
அச்சுறுத்தல் செய்கிறது

இன்றெனக்குப் படங்காட்டும்
'சூழும் சுடர் எல்லாம் - நாளை
வீழும் இருட்கட்டையாய்'
என்றும் நானறிவேன்.

அம்மா ஒவ்வொரு நாளும்
தன் கனவுகளை
கண்ணீரில் தோய்த்தெடுத்து

கைகளிலே தருகின்றாள்
பாசம் முன்வந்து
மோதிநிற்கிறது
எல்லாச் சிறகுகளையும்
என் கைகளாலேயே
ஒடித்துப் போடுகிறேன்

இப்போது நானும்
பட்டத்துக்கும் வேலைக்குமாய்
படிக்கிறேன்,
எல்லோரையும் போலவே!

*21-08-2005*
ஞாயிறு தினக்குரல்

# சொற்கள் பற்றிய இரண்டு கவிதைகள்



I.

எச்சில் விழுங்கு!
இன்னும் விழுங்கு!!
தொண்டைக் குழிக்குள்
துள்ளிக் குதித்து
எட்டாது களைக்கும்
சொற்களின் கவலை
நாளெல்லாம்
உன் முகத்தில்
எழுதப்பட்டு கிடக்கட்டும்!

II.

என்னைச் செரிக்கும்
வலிகளின் நிமித்தம்
சொற்கள் வரமுடியாது
மௌனம் பிசைகிறது

புகைச்சுருளாய்
காற்றைத் தழுவி நிற்கும்

தனித்து விடப்பட்ட
சொற்கள்
சுய மைதுனத்தின்
அந்தரங்கமாய் என்னோடு
மட்டுமே புரள்கின்றன.

ஜீவநதி
புரட்டாதி - ஐப்பசி 2007

# பல்லி + வீடு + நான் + அவள்



என்வீட்டுக் கண்ணாடியின் மீது
பல்லி
துள்ளி விழுந்து ஓடுகிறது.
என் விம்ப முகத்தில் பல்லி ஊர்கிறது
நான் சிரிக்கிறேன்
பல்லி வெருண்டு
'வாலறுந்து' ஓடி
சுவரில் ஒட்டியபடி ஏதோ சொல்கிறது
என்னை திட்டுகிறதா?
மீண்டும் சிரிக்கிறேன்
கண்ணாடி உடைந்து விழுகிறது
கண்ணாடித் துண்டமெங்கும்
வாலறுந்த பல்லியின் விம்பங்கள்.

பல்லி சொல்லுவதும்
பல்லி என்மேல் விழுவதும்
தோழமையாகிவிட்ட வாழ்வில்
என்னோடு கைகோர்த்து
களைத்தபடி கடைக்குச்

சாப்பிட வந்தவள்
கையில் எடுத்து பிய்த்த வடைக்குள்
கருகிய பல்லியைக் கண்டு
கண் அதிர்ந்து அருக்குழித்தாள்
அவளின் முகம் பல்லியின் முகமாய் மாறி
ஏதேதோ சொல்லத்தொடங்க
கடையையும் எங்களையும் பலர்
மொய்த்தனர்.
வாலறுந்த பல்லிகளாய்
நாமிருவரும் வெளியேறினோம்
கடை இறுக்க மூடப்பட்டது.

மீண்டும் மீண்டுமாய்
பல்லிகளின் வாழ்க்கைக்கும்
என் வாழ்க்கைக்கும்
முடிச்சுக்கள் இறுகுகின்றன
பஞ்சாங்கமும் கையுமாய்
என் நாள்ப் பொழுதுகளை நிறைக்கிறேன்.

- த.அஜந்தகுமார்

28

நாள்கள்.... வாரங்கள்.... மாதங்கள்
நீள்கின்றன
ஒண்டிக் கிடக்கிறேன்
ஒரு பல்லியாய் என் வீட்டோடு.

ஜீவநதி
ஆவணி 2007

# எனக்கான விசேட ஒளிபரப்பு

இருள் மண்டிக் கிடக்கும்
நீண்ட வீதி வழி
பயணிக்கவேண்டிய
நிர்ப்பந்தம் நிகழ்ந்துள்ளது

கற்களில் கால்கள் இடறுவதும்
இரத்தம் கசிவதும்
முட்களில் பாதங்கள் முத்தமிடுவதும்
வழமையான நிகழ்வுகளாயின

எப்போதாவதுதான்
வாகனங்கள் உமிழும்
வெளிச்சங்களைக் கூடத்
தரிசிக்கமுடிகிறது
அவற்றின் முன்
கூசி.... விலகி....
தடுமாறி நடத்தலை விட
இருளுக்குப் பழகுதலே
நன்றென்று தோன்றிற்று

கால நகர்வில்
ஒரு ஒளியின் பிரகாசத்தை
என்னுள் நான் உணர்தல்

- த.அஜந்தகுமார்

இப்போது நிகழ்கிறது

இப்போதும்
இருள் மண்டித்தான்
இந்த வீதி கிடக்கிறது
இதில் பயணிக்கும் ஆரம்பப் பயணிகள்
இருளுள் கல்லுள் முள்ளுள் நடக்கும் போதான
ஆக்கினை பற்றிப் புலம்பியபடியே
பயணிக்கின்றார்கள்

இருள் மண்டிக்கிடக்கும்
இந்த வீதி.... என் பயணத்தின்போது மட்டும்
புதுப்பிரகாசத்தைப் பொழிகிறது

ஆரம்பப் பயணிகளும்
இனிவரும் நாள்களில்
தம்முள் ஒரு பிரகாசத்தை
உணரக்கூடும்.

கலைமுகம்
ஏப்ரல் - ஜூன்
2005

# உன் தவறும் என் சக்தியும்



விரிந்து வியாபகம்
கொண்டிருக்கும்
இந்த விருட்சத்தின் கிளைகளை
ஒவ்வொன்றாயோ.... ஒட்டுமொத்தமாயோ
கத்திரிப்பதிலேயே நீ கவனமாகியுள்ளாய்

உன்னுள் வளரும் வன்மத்தை
ஒரு கட்டுக்குள் கொண்டுவர
என்னால் முடியாதென்றுமட்டும்
நீ நினைத்துவிடாதே!
உனதெண்ணம் தவறென்று
நீயுணரும் பொழுதொன்றை
உன்னுள் போர்த்தும் வரை....
நான் சலியாது சக்திகொள்வேன்

கடக்கும் கணங்களுள்
தடக்கும் ரணங்களின் வலியினூடே
நான் பயணித்து வரினும்....
என் வலியின் வளத்தால்
நிமிரும் குணமொன்றின் கூர்மையை....

- த.அஜந்தகுமார்

என்னுள் நீ கவனிக்கத் தவறுகிறாய்
இப்போது கூட நீயொரு கிளையினை
வெட்டுவதை நானுணர்வேன்
மறுபக்கமாய் இந்த விருட்சத்தில்
ஒரு துளிர்ப்பின் நிகழ்தலொன்றை
நீ கவனிக்கத் தவறுகின்றாய்
இப்போது அடுத்த கட்டமாய்
இன்னோர் கிளையொன்றை
ஏன்.... முடிந்தால் வேரோடே சாய்க்க
நீ முயல்வது தெரிகிறது

இப்போது நான் யாவும்
உணர்ந்துகொண்டேன்
எதிர்க்கும் சக்தியும் முழுதாய்ப்
பெற்றுக்கொண்டேன்

இனி நீ என்ன செய்யப் போகிறாய்?
இனி.... நான் எதற்கும் தயார்
எங்கே.... உன் ஆயுதத்தோடு வா பார்க்கலாம்!

# மழை எழுதிய எதிர்வினை



நிலத்தின் மீது
கவிதை எழுதிக்
கரைகிறது மழை

மழையை வாசிக்க
எந்தன் ஆசைகள்
நடக்கத் தொடங்கின.
நடக்கத் தொடங்கியபோது
கால்களின் கீழே
பாம்பாய் ஊர்ந்து
மெலிதாய் ஓடிக்கொண்டிருந்தது
வெள்ளம்

ஒவ்வொரு மழைத்துளிகளும்
எனக்குள் இறங்கி
வழியத் தொடங்கின.
ஈரலிப்பின் ஊடே
நடுக்கமொன்று
என்னை ஊடறுத்து
நுழைந்தது.

மழை குறித்த வாசிப்பு

- த.அஜந்தகுமார்

எதிர்வினை ஒன்றை
என் தலைக்குள்
எழுதிச் சென்றது

மழை மீதான
விருப்புக்கள்
சடுதியாய்ச் சரிந்த நேரத்தில்
மழை தன் கால்களை
வேகவேகமாய் ஊன்றி
பெருவெள்ளமாய்
ஓடத் தொடங்கியது.

*22-08-2005*

நமது ஈழநாடு

# அகால மரணத்தின் வாசல்



எனது
அகால மரணம் குறித்த
அதீத அச்சமொன்று
எனக்குள் ஒளிந்திருந்து
எட்டிப் பார்க்கிறது

எச் செயலிலும்
என் மரணம் குறித்த
எச்சரிக்கையை
தரிசிக்காது
விலகமுடியா
அவலமொன்று
எனக்குக் காலவரமாய்
அளிக்கப்பட்டிருக்கிறது

நினைத்துப் பார்க்கவே
நெஞ்சுக்குழிக்குள்
பயங்களின் பயணம்!
ஒரு கணத்துள்
என் மரணம் சம்பவிக்கும்
அத்தோடே....
எனது கவிதைச் சிந்தனைகள்

- த.அஜந்தகுமார்

காதல் உறவின்
களங்கமில்லாச்
சொந்த நினைவுகள்

அடுத்தடுத்த நாள்கள் குறித்த
அடுக்கடுக்கான திட்டங்கள்
யார் யாரோ பற்றிய எனது
விமர்சனங்கள்!

இன்னுமின்னுமான ஏதேதோ
நினைவுகள்.... கற்பனைகள், சிந்தனைகள்
யாவுமே நொருங்கி அழிந்து
அடையாளம் தொலைதலை
நினைக்கவே....
எனினும்
கழுத்தை நெரிக்கிறது
இயற்கை!

அகாலத்தினால்
என் மரண அறிவிப்பு
நிகழுமென்றால்
நான் என்ன செய்வேன்?

என் மனச் சேமிப்பை
யாரிடம் கொடுத்துப் பாதுகாப்பேன்?

பெரிய பொக்கிஷங்களை
நிரப்பி வைத்துக்கொண்டு
எச்சரிக்கை அறிவிப்பை
ஏந்தியபடி
அச்சத்தின் ஆட்சியோடு
பொழுதுகள் போகிறது.

*13-03-2005*

உதயன்

# ஒரு தேவதையின் ஒளிக்கவிதை



ஒரு தேவதை
திடீரென எனக்குள்
இறங்கினாள்

விழி மலர்த்தி
வழி பார்த்தேன்
அத்தேவதையின்
பிம்பங்களின் பிரகாசத்தோடு
வீதி நிறைந்திருந்தது

அசரீரியாய் அவளுதிர்க்கும்
வார்த்தைகள்
செவியடைந்து என்னைக்
கவியாக்கத் துடித்தன

ஒப்பனைகளை
ஓரமொதுக்கி
என்னைப் புதுக்கியெடுத்து
தன் ஒளிக்கரங்களால்
ஆசீர்வதித்தாள்

அவளின் ஆசீர்வாதத்தில்
ஆர்ப்பரித்து.... ஆனந்தித்து

என் அறைச் சுவரெங்கும்
கவிதைகள் எழுந்தன.

எனக்குள் இறங்கிய தேவதை
இப்போது
என்னவானாள் என்பது
தெரியவில்லை

எனினும்
அவள் நினைவாய்க்
கவிதை இருக்கிறது.



*01-08-2005*
நமது ஈழநாடு

## வீரம் குறித்த ஒரு கேள்விக்குரல்



என் காலில்
சக்கரமும்
என் முதுகில்
இறக்கையும்
என் பயணத்திற்காய்
ஏற்பாடாயுள்ளன.

என் வலப்பக்க இடுப்பில்
கூர் வாளும்
என் இடப்பக்க இடுப்பில்
கூர்க்கத்திகளும்
என் கையில் துப்பாக்கியும்
என் பயணத்திற்காய்
ஏற்பாடாயுள்ளன.

பயண ஏற்பாடுகள்
முடிவுற்றதாய்
அறிவித்தல்கள் கிடைத்தபோதும்....
ஏதோ ஒன்றை இழந்தது போல்

ஏதோ ஒன்றைச் செய்யாதது போல்
ஏதோ ஒன்று மீதமிருப்பது போல்
அடிமனதின் அறிவிப்புச் செய்தி
அடிக்கடி கேட்டபடியிருக்கிறது.

*19-12-2004*
ஞாயிறு தினக்குரல்

# மறந்து போனேனா....?

இலைகள் பசுமை போர்த்தியிருக்கும்
அழகு தன்னில்....
கண்கள் லயிக்கும்
கணங்கள் களவாகும்
அவைகள் பசுமை இழக்கும்
தருணம் தன்னில்....
மனது வலிக்கும்
கண்ணீர் வடிக்கும்

சருகாய் அவை பரந்து கிடக்கையில்
வாரிக் குவித்துக் குப்பையாக்கி....
புது மரங்கள் கீழே உரமாய்ப் புதைக்கையில்
மனதில் நம்பிக்கை முளைக்கும்

நல்ல கருமைப் பச்சையாய்
இலைகள் ஜொலிக்கையில்
சருகானவற்றின் வரலாற்றை
நான் மறந்து போனேனோ?
எனக்கே தெரியவில்லை.

*19-09-2005*

நமது ஈழநாடு

# நிர்வாணத் தெருவும் கவிஞனின் வலியும்



தெருக்களின் நிர்வாணத்தில்
பரவும் உஷ்ணம்
ஒவ்வொரு மரணத்தின்
பயங்கரத்தையும் எழுதுகிறது.

இப்போதெல்லாம் தெருக்களுக்கு
உடுத்தலும் கலைத்தலும்
நிர்வாணமும்
மீண்டும் பழக்கமாகிவிட்டது

அதிகாரத்தின் வெம்மை
நெஞ்சுக்குள் பரவி
நெஞ்சுமயிர்களைப்
பிடித்திழுக்கிறது
கபாலத்துள் இறங்கி
கரகரத்து
உயிரின் ரகசியம்
தொங்கிக் கொண்டிருக்கிறது

அவசரங்களுக்கு
வீங்கவும் சுருங்கவும்
விளங்கிய தெருக்கள்

- த.அஜந்தகுமார்

நெரிசலின் நிழல்களின்றி....
வெயிலுக்குத் தார் உருகியும்
மழைக்கு உருக்குலைந்தும்
சோகம் சொல்லிக் குலுங்குகிறது

தெருக்களின் நிர்வாணத்தில்
நான் நடக்கும் போது
நெஞ்சிலும் பிடரியிலும்
இரத்தம் கசிந்து பீறிடுகிறது.

*18-12-2005*
உதயன்

# வல்லமையைச் சந்தேகித்தலாய வல்லமை



எனக்கேயான வல்லமை
பெரும் ஒளிப்பிழம்பாய்
எங்கும் நிறைகிறது

வெளியெங்கும் பரந்த
உந்தன் வல்லமைகள் மீது
சந்தேகங்களை
அமர்த்தி நிறைத்தேன்

எப்படி என்னுள்ளோர்
குரூரம் குந்தியதென்ற
விழிப்பின் பின்னுமொன்றும்
விளங்காது பிசகிறது

உனக்கேயான வல்லமையோடு
எனக்கேயான தீராச் சந்தேகங்களை
ஒன்றாய் இருத்தி
எனக்குள் நானே
பகிர்வுள் கலந்தேன்
உனக்கேயான வல்லமையின்

- த.அஜந்தகுமார்

பிரகாசங்கள்
உருவி எடுத்தன
சந்தேகக் கணைகளை!
திடீரென்று இப்போது
என்னுள்ளோர்
பிரகாசம் வந்தமர்ந்து
மிளாசி வளர்கிறது

உனக்கான வல்லமை
நீயறியாது
எனக்குத் தரப்பட்டபோதும்
நீ இப்போதும் நீயாகவே!

எவ்வாறான போதும்
சந்தேகங்கள்
எப்போதும் எனக்குத்
தேவைப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

ஞானம்
டிசம்பர் - 2005

# என்னிலிருந்து வெளியேறும் ஒருவன்



ஊழித்தாண்டவனாய்
எனக்குள் ஒருவன்
சுற்றிச் சுழற்றி
என்னை ஆட்டியபடி....

மனம் அதிர்ந்து
கண் கனிந்து
கை பதறி
கால் நடுங்கி
நான் சோர்ந்து வீழ
அவனின் ஆட்டம்
உக்கிரம் கொள்கிறது

நாயின் வாலாய்
என்னை நிமிர்த்த முடியாது
திணறித் திகைத்தபடி
உக்கிரம் கொள்கிறேன்
சில கணங்களில் விழித்தபடி!

அவனின் உக்கிரம்
எனது உக்கிரம்

- த.அஜந்தகுமார்

உக்கிரத்தின் உற்பவிப்பில்
அவன் வெளியேறுகிறான்

நிமிடங்கள் எரிந்து வீழ
அவன் மீண்டும் வந்து
யாதொன்றும் வாய் திறவாது
தீதென்று ஏதோ எண்ணித்
தேம்பியபடி திரும்பினான்.

- திண்ணை

# இழை பிரிந்த மௌனங்களின் கதைச் சித்திரம்



முடிவற்றுத் திறக்கிறது
நமது இரகசியங்களின்
உள்ளறைகள்

ஒரு புள்ளியில் தொடங்கும்
நம் கதைச்சித்திரம்
மீண்டும் அந்தப் புள்ளியில்
கால் புதைக்கிறது

சுவாரசியங்களில்
பொழுதுகள் தின்னப்பட
நமது கதிரைகளைக்
கதைகள் நிறைக்கின்றன
காற்று கேசத்தைத் தொட்டு
வருடிச் செல்லும் உணர்வில்
தொற்றிக் கொள்ளும் சொற்கள்;
இறுகக் கைபற்றி
என் முகம் பார்க்கின்றது

இழை பிரிந்த
மௌனங்களிடம்
காயங்கள் ஏதும் இருக்குமோவென்று

- த.அஜந்தகுமார்

50

நான் கவலைப்பட,
நீ சிரித்த சிரிப்பில்
மின்னல் வெட்டியது
மழை பொழிந்தது
மழை நனைத்த நிலமாய்க்
குளிர்ந்தது கால்
கைகளின் நடுக்கத்தை மறைக்க
காற்சட்டைப் பொக்கற்றுக்குள் கைநுழைத்து
வான் பார்த்தேன் நான்.

-

வார்ப்பு.கொம்
*2008*

# காதல் வழிப்போக்கனோடு நடந்துவரும் இயற்கை



நீ ஒன்றும் பேசாது பறையாது
உம்மென்றபடி இருக்கிறாய்
நிமிர்கிறேன்
நிர்மலமாய் வானம்.

எழிலான ஓவியமாய்
என்னருகில் நீ!
வானத்திலே பூக்கிறது
வெண்ணிலவு முழுதாக!

உன்னுடன் ஒன்றைப்பற்றிக்
கதைக்க நினைக்கின்றபோது
நினைவுகள் சிதறிப் பின்
வாயடைக்கிறது,
நட்சத்திரங்களால் வானம்
சிதறிக் கிடக்கிறது

எனக்கும் உனக்கும் இடையில்
கரும்புள்ளிக் கோடுகள்....
வானத்து மதியை மறைக்கிறது
கருமேகம்

- த.அஜந்தகுமார்

52

சொல்லிடவும் துணிந்திடவும்
மனதெங்கும்
ஓர்மம் தழைக்கிறது
கருமேகம் விலகி வழிவிட
வானத்திலே
கையசைக்கிறது வெண்ணிலா.

திண்ணை
ஐப்பசி 2008

# அநிச்சயக் கோடுகளில் உதிரும் புன்னகைகள்



வாத்சல்யம் பொழியும்
கண்களின் குளிர்மை
என்னை அழைத்துச் செல்கிறது
பிரபஞ்சத்தின் ஒவ்வொரு
வாசல்தோறும்.

இனம்புரியாச் சிலிர்ப்பு
கண்களில் இறங்கி
அந்தரித்து
உத்தரிக்கிறது எனது
உடலின் அசைவுகளை.

பேசமுடியாது வெறித்துக் கிடக்கும்
சொற்களின் கிடங்கு
யாருமற்ற ஏகாந்தத்தில்
தன் மௌனங்களை உடைக்கிறது
முட்டை உடைத்துவரும் குஞ்சாய்!

கனவுகளின் நிறங்கள்
கவிதைகளில் வெளிக்கிளம்ப
பேச்சின் சுவாரசியங்கள்

- த.அஜந்தகுமார்

புதைகிறது
ஆழக்கிடங்கொன்றில்!

சிரிப்புக்கள் வரண்ட
உதடுகளை
சகிக்க முடியாது
முகம் காணும் விருப்பமின்றி
திரும்பி நடக்கிறேன்
திசைகளின் வெறுமையில்!

எல்லோரிடமும் பூத்துக் குலுங்கும் புன்னகை
என்முகம் கண்டதும்
ஓடிக் கொள்கிறது
புன்னகை கொல்லும் பாவம்
புதைகிறது என்னுள்!

வானம் பார்த்து நடக்கிறேன்
ஏதோ ஒரு பொறுமையில்....

திண்ணை
*27-03- 2008*

# நிலைத்தலின் பாங்கு



ஒரு சிற்பம்
உயிர் பெற்றுக் கொண்டிருந்தது

சிற்பி செத்துக் கொண்டிருந்தான்

அவன் கற்களைச் செதுக்கி
சிற்பத்திற்குள் உயிரைப் புகுத்தினான்

காலம் அவன் வாழ்வைச் செதுக்கி
உயிரை எடுத்துக்கொண்டிருந்தது

உடல் நலிந்து நலிந்து...
சிதைந்துகொண்டிருந்தது

சிற்பம் மிளிர்ந்து மிளிர்ந்து
ஒளிர்ந்தபடியே மெருகேறிக் கொண்டிருந்தது

அவன் விழிகள் மாத்திரம்
அசாதாரண உயிர்ப்பை உள்வாங்கிப்
பிரகாசித்துக் கொண்டிருந்தது

- த.அஜந்தகுமார்

அவன் விழிகளின் உயிர்ப்போடு
சிற்பமும் மிளிர்ந்து நிமிர்ந்தது

சிற்பி செத்திருந்தான்
சிற்பம் உயிர்த்திருந்தது!

தெரிதல்
ஆடி - ஆவணி 2005

# கானலின் குறிப்பு

என் உள்ளங்கைகள் இரண்டுக்குள்ளும்
ஒளிக்கீற்றொன்றைச் சிறைப்பிடித்திருந்தேன்



ஒளி வியாபகமாயிருந்த
ஏதோவொரு கணப்பொழுதுள்
ஒளிக்கீற்றினைச் சிறைப்பிடித்திருந்தேன்

அப்போது உள்ளங்கைகளைத்
திறந்து பார்த்தேன்
உள்ளே ஒளி வசித்துக்கொண்டிருந்தது

ஒளி களவுபோன இந்தப் பொழுதில்
உள்ளங்கைகளை விரித்தேன்,
வெளிச்சம் இல்லா வெறுமை.

என் உள்ளங்கை வெளிச்சத்துக்கு
என்ன நடந்தது?
இருளைச் சபித்து
எனது நாள்கள் நகர்கின்றன....

தெரிதல்
தை - மாசி (2005)

- த.அஜந்தகுமார்

# உருக்குலைந்த என் கவிதைகள்



கவிதை எழுதிடும் ஆசை
மனவெளி எங்கும் உட்கார்ந்து
தன் கால்களை நடப்பித்து
எம்பிக் குதித்து எக்காளமிட்டு
தனதிருப்பை நிறுவுவதிலேயே
ஆர்வத்தைக் கொண்டிருக்கிறது

கவிதைக்கான கருக்கள்
ஒவ்வொரு பயணங்களிலும்
ஒவ்வொரு நிகழ்வுகளிலும்
ஒவ்வொரு நினைவுகளிலும்
ஒவ்வொரு கனவுகளிலும்
ஏதோவொரு வகையில்
கிடைத்தபடியே இருக்கிறது

காகிதத்தில் எழுத முனைகையில்
கருவை மறந்துபோகும் துர்ப்பாக்கியம்
சிலவேளைகளில் நிகழ்ந்துவிடுகிறது
மறத்தலைத் தவிர்க்க
கருவை நினைக்குமுடனேயே
உள்ளங்கையிலோ
அகப்படும் சின்னக் காகிதத்திலோ
குறித்து வைப்பேன்

சில வேளைகளில் வியர்த்து
உள்ளங்கையில் எழுதியது
என்னவென்றே தெரியாமல்
உருக்குலைந்து போயிருக்கும்
காசோடோ வேறு பொருளோடோ
சின்னக் காகிதமும்
வழிமாறித் தொலைந்திருக்கும்

எப்படியோ
எழுதிவைத்த கவிதைகளைச்
சேகரித்து வைத்திருந்தேன்

ஒரு கடும் மழைநாளில்
ஒருநாளும் ஒழுகாத என் அறையிலும்
மழை ஒழுகி...
என் கவிதைக் காகிதங்கள்
உருக்குலைந்து போயின.

உதயன்
2005.04.10

## நாங்கள் பிறத்தலாய நாடகம்

வாழ்வின் வசீகரம்
காந்தம் ஒன்றை வைத்து
அழைக்கிறது

வசீகரம்
உன்மூலமாய் எல்லா வாசல் வழியாலும்
நுழைந்து
பரபரப்பொன்றை கிளர்த்துகிறது

ஆற அமர, உன்மடி சாய்ந்து
கருங்குழல் நுகர்ந்து
காற்றும் கோபமுற
உனைத் தழுவிப் புதைவேன்

வியர்வையின் கசகசப்பை
வெப்பத்தின் நீட்சியைக்
கடந்து கொண்டு காதலின் சாத்தியங்கள்
கூரை ஏறி வானில் நிறைகிறது
நீயும் நானும் சலியாது சேர்ந்து

எங்களின் வழியே
நாங்களே பிறந்து
என் பெயரை நீயும்
உன் பெயரை நானும்
மழலை மொழியில் மலர்த்தியபடி
தவழத் தொடங்குகிறோம்.



*2006*

- த.அஜந்தகுமார்

# என்னுள் நவீன ஓவியம்



சுவரும் நானும்
பார்வைகள் சப்பிச்சலிக்கிறோம்
சுவரில் சித்திரம் வரைய
ஏவும் மனது கை நடுங்கி
இயலாமை

இயலுமையின் சாத்தியங்களை
நடுங்கும் கைகள்
ஓயாது தட்டுகிறது

கைகளில் காயங்கள்
காயங்களால் கை
சீழ் ஊறிச் சிதம்பி
இனிக் கை
கழன்று விடும் ஐயமே தழைக்கிறது

சுவர் நோக்கி
மெல்ல மெல்ல
உயர்கிறது கை
வேதனை, வலி, இயலாமை!

ஓய்கிறேன்
சீழோடு இரத்தமுமாய்
அப்பொழுதில்
ஒரு துளி
சீமெந்து தரையில் சிதறியது
அந்தத் துளியை
கட்டற்ற ஆச்சரியத்துடன்
களைப்பற்றுப் பார்க்கிறேன்

நவீன ஓவியம் ஒன்றைப்
புரிந்து கொள்வதற்கு
முயன்று கொண்டிருக்கிறேன்.

*26.02.2006*
வீரகேசரி வெளியீடு

# ஒளிப்பிழம்பை வினாவுதல்

*I.*

*கேட்கலையோ உலகீரே*
*என் விசும்பல்*
*மண் பிளந்து விண் எழுந்து*
*ஒலிக்கிறதே*
*கேட்கலையோ?*

*ஆட்காட்டி விரலுக்கு*
*ஆயிரம் அர்த்தங்கள்.*
*நீட்டாய் இருந்த விரல்*
*குறுகி,*
*நினைக்க முடியாப் புள்ளியாய்*
*கையோடு ஒட்டுண்டு*
*புழுங்கிக் குமைகிறது*

*போக்காட்டும் வாழ்க்கையில்*
*இருப்பது போதுமென்று இருந்திட்டேன்*
*சாக்காடு வரைதானே வில்லங்கம்!*
*சரி, பொறுப்போம் என்று*

நாக்கைப் பல்லைக் கடித்து
நான் பொறுத்தேன்
கூக்காட்டிச் சிரிக்கிறது வாழ்க்கை
குண்டுச் சட்டிக்குள்
குதிரையோட்டுகிறது காலம்
கேட்காமல் என் மனசு
விசும்பலிடை ஏதேதோ சொல்கிறதே
ஆக்கினைதான்
என் செய்வாய் என் மனமே!

*II.*

ஒளிப்பிழம்பே!
சோதியாய்த் துலங்கும் அகண்டமாயினை
ஆயின்,
என்னை ஏன் இப்படிச் சோதிக்கின்றனை?
உனது சுவடுகளைத் தொடர்ந்து வந்து
உன்னைத் தேடும் மூர்க்கனாய் மாறி
முயல்கிறேன், என் கனவுகளுடன்!

- த.அஜந்தகுமார்

ஒரு சுவட்டிற்கு அப்பாலான
உன் பெரிய்ய மறுசுவட்டில்
கால் வைக்க முயன்று
நெருங்கி வர,
நான் கருகும் வாசம்
என்னையே ஓங்காளிக்க வைக்கிறது
பரவும் உஷ்ணத்தில்
பாதிமுகமே எரிந்தது போல்..........
பிரமை!

கானல் சுவடாய்
ஒளியாய்......
நீ மாறிமாறிச் செய்யும் பராக்கில்
எலும்பாய் மாறி
என் சுயம்
அங்கு இங்கென்று
காற்றில் உலைகிறது.

உனக்கென்ன?
என்னைச் சோதிக்கும்
விளையாட்டு இதுவென்று
நீ மகிழ்வாய்!
ஏதிலியான என் ஏழ்மை கண்டு
ஒரு வெற்றிக் களிப்பில்
ஊடல் கொண்டிருந்த உன் பிராட்டியுடன் நீ
'மொத்தி' மகிழலாம் கலவியில் களிக்கலாம்

நான்
மனையாளை, மகவை
மண்ணில் புதைத்த துயரில்
கலங்கிக் கதறியழ;

நீ
மீண்டும் மீண்டுமாய்
உன் பிராட்டியோடு முயங்கு!
நெற்றிக் கண்ணில் இருந்து
பிள்ளைகளை உற்பவி!

- த.அஜந்தகுமார்

சுடுகாடு சென்று
எங்கள் சாம்பல்கள் எடுத்து நீறணி!
உடலம் வளர்த்தி
எரிதழல் மூட்டிய இடத்தில்
உன் தேவர் குழாம் புடைசூழ
புதல்வர்கள் இருவர் சகிதம்
பிராட்டி சமேதனாய்
சோமபானம் பருகி மகிழ்!
ரம்பை ஊர்வசியை நடுவே சுழலவிடு!
கண்களை ஒளியாக்கு!

தம் கனவைப் புதைத்து விட்டு
மாண்ட தலைமுறையோடு
புணர்ந்து கிட!
கலவிக் களிப்பின் தத்துவத்தை
உலகுக்கு உரை!

-திருவுடையாள்
கரவெட்டி பிரதேச செயலக
சிறப்புமலர் - 2007

# கனவுகளின் மூலப் பிரதி

கனவுகளின் மூலப்பிரதி
சுவடிகளில்தான் உண்டென்று
அசரீரி ஒன்று
அறிவித்தபின்னர்
சிறகுகள் பூட்டி
காலத்தின் முதுகில் ஏறித்
தேடிக் களைத்துத்
திரும்பிய பின்னர்
கனவுகளின் பின்நவீனப் பிரதிகளைக் கூட
கறையான்கள் அரித்திருந்தன.

கணினிகளின் பாதுகாப்புப் பற்றி
கலந்து கதைத்ததை
நடப்பில் கொண்டுவர முடியாது போன
அவலம் குறித்து
அழுதுபுலம்பிக்
கரைந்து நிற்கையில்
கதவைத் திறந்துவந்த நண்பன்,
தன் கனவுகளை



- த.அஜந்தகுமார்

கணினியில் பாதுகாப்பாய்
வைத்திருந்தபோதும்
இராட்சதன் ஒருவன் அதனுள் புகுந்து
யாவும் நாசமென
என் தோளில் சாய்ந்தான்.

கனவுகளின் எல்லாப் பிரதிகளும்
என்னில் சாய்ந்து
நான் நசுங்கத் தொடங்க,
கனவை உதைத்து விழித்தேன் காண்.

ஜீவநதி
*2009*

# புன்னகைகளின் விஷங்கள்



என்னைக் கடந்து செல்லும்
முகங்களின் புன்னகைகளை
எளிதில் என்னால்
நம்பிவிட முடியவில்லை

புன்னகைகளின்
பின்னால் தடவப்பட்டுள்ள
விஷங்களின் கதிர்கள்
என்னைப் பயமுறுத்துகின்றன

என் முன்னால்
பற்கள் வெள்ளையாய்ச் சிரிக்கின்றன
என் பின்னால்
அவை என்னைக் கேவலப்படுத்தி
வஞ்சகம் செய்கின்றன

எதையும் நம்பிவிடமுடியாதபடி
காலம் என்னைக்
கடந்தபடி இருக்கிறது
ஊரெல்லாம் என் கதைகளை
சொல்லித் திருப்திப்படுகின்றன வாய்கள்
வாய்களில் வழிந்தபடி இருக்கும்

- த.அஜந்தகுமார்

விஷங்களையும் வீணீரையும்
என் கண்கள் கண்காணித்தபடியே
இருக்கின்றன

யாரையும் எளிதில்நம்பமுடியாத
அபத்தம் எண்ணி
என் மனம் அழுகின்றது

என் முன்னால்
நீலம் பாரித்த ஒரு நதி
ஓடிக்கொண்டிருக்கிறது

ஏன் கண்ணீர்த்துளிகள்
நீலநதியில் சேர்கின்றன

கண்ணீர்த்துளிகள்
என்றோ ஒரு நாள்
நதியைச் சுத்திகரிக்கும்
என்று என் மனம்
நம்பியபடி இருக்கிறது

*21072009*

## நீயெனக்கு இல்லையென்றான
## இந்த இரவு

நீயெனக்கு இல்லையென்றாகி விட்ட
இந்த இரவில்
அமைதியின் கணங்கள்
என்னைத் தின்று கொண்டிருக்கின்றன

சருகுகள் காற்றில்
நடந்து வரும் ஓசை கூட
என் இதயத்தின் கதவுகளை
நொருக்கிவிடுகிறது

நேற்று நீயென்னைப் பிரிந்து சென்றாய்

சொல்ல முடியாத் துயர்
விழிகளில் இரத்தமாய்க் கசிய
நீர் மறைத்து
வலியின் சுழிப்போடு
உதடு பிரியா அவஸ்தையோடு
விடை கொடுத்தேன்



- த.அஜந்தகுமார்

வேதனையின் முனகலில்
என் காதலின்
பசிய நினைவுகள் வரிசை கொள்ள
என் பார்வையில் இருந்து
நீ மறைந்தாய்

நம்பிக்கைச் சுவர்களிடை
நாம் அகப்பட்டோம்
சுவர்கள்
மிகச் சாதாரணமாய்
இரத்தம் உறிஞ்சிக் குடித்து
கோதாய் எறிந்தன காதலை!

என் காலங்கள் எல்லாவற்றிலும்
இருளின் பற்கள் கோரமாய் முளைக்கின்றன

நானே எனக்குக் கனத்து நசிந்தபடி
இருளின் பற்களிடை
சப்பப்படுகிறேன்

ஜாதகப் புத்தகத்தின்
பழுத்த தாள்களிடை
இறந்து போய்
ஒட்டிக் கிடக்கும் பூச்சியாய்
இந்த வாழ்வோடு
ஏதோ ஒட்டிக் கிடந்தபடி
என் வாழ்வு,
என் கண்களிடை மங்கலாய்த் தெரிகிறது

*11012009*

## ஈக்கள் கலந்த ஒரு கோப்பைத் தேநீர்

நேற்று சுடப்பட்டு இறந்து போனவனின்
மூச்சின் இறுதி இழை
காற்றில் வருகிறது கலந்து.

ஈக்கள் அவன் மூக்கிலும் வாயிலும்
இரத்தம் கொட்டிய இடத்திலும்
மொய்த்துக்கிடந்து
அவனின் இறுதிச் சொற்களைத்
தம்மோடு எடுத்துச் சென்றன

யாராவது ஒருவனின்
சாப்பாட்டுக் கோப்பையில்
தேநீர்க் கோப்பையில்
மலக்குழியில்
அந்த ஈக்கள் இருக்க முயற்சித்தாலும்
இறந்தவனின் சொற்களைக் காவும் ஈக்களை
எல்லோரும் கலைத்துக் கொண்டே
இருக்கிறார்கள்

கலவரம் நிறைந்திருக்கும் அவர்களின் முகத்தில்
இறந்துபோனவனின் முகவிகாரம் இறுகிக்
கிடக்கிறது



நாம் எல்லோரும் அந்த ஈக்களைக்
பிடித்துக் கசக்கி
தேநீருள் போட்டு:
நுள்ளான் சாப்பிட்டால்
நூறாண்டு வாழலாம் என்பது போல்
குடிப்போம்!
குடிப்போம்!!
வாழ அதுவே வழி

*14062008*

# ஆர்ப்பரிக்கும் என் கடல்

என் கடல் ஆர்ப்பரிக்கிறது

அலைகளைக் கரைக்கு அனுப்பி
நுரைக்கிறது

ஒளியின் தூவலில்
நான் பட்டுத் தெறிக்கிறேன்

வானம் எனக்குள் இறங்கி
லாவண்யம் பொழிகிறது

ஒவ்வொரு நாளைய
சூரியனையும்
தின்று தீர்த்து
நான் மினுங்குகிறேன்

மண் தழுவி
கரையிலொரு கவியெழுதி
கண் குளிர்ந்தபடி
என் கடல் ஆர்ப்பரிக்கிறது

ஒளியின் தூவலில்
நான் பட்டுத் தெறிக்கிறேன

*20102009*

✓ 0774525003
✓ 0776060461
✓ 0771942055
✓ ஆனகன் 0778273555
✓ மதி - கேமநன் 0776384607
✓ சிசி. 0779564583
✓ பபா. 0779081599.
✓ ~~பபா~~ பாலா. 0774138985

✓ நாகமாமி. 0112639478
ம.சேனா. 006016366 40893 ✓
~~நாகனி~~
சுவா. 0049983189841 ✓

OFF HELI



அஜந்தகுமார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே தமிழைச் சிறப்பாகப் பயின்று பட்டம் பெற்றவர். தற்போது தமிழ்த்துறையில் உதவி விரிவுரையாளராகவும் பணிபுரிந்து வருபவர். இவை அஜந்தகுமாருக்கான சிறியதொரு அறிமுகக்குறிப்பாக அமையலாம். ஆனால் அவன் எழுதிய கவிதைக்கு அவனேதான் சாட்சியாக அமைய முடியும். சொல்ல நினைப்பதையெல்லாம் சொல்லிவிடுவதில்லை : சொல்லிவிடுபவையெல்லாம் சொல்ல நினைத்தவைகளாகிவிடுவதுமில்லை. அஜந்தகுமார் சொல்ல நினைத்தவை எவை? சொல்லில் வடித்தவை எல்லாம் அவன் நினைத்ததையே பிரதிபலிக்கின்றனவா? இதற்கு யார் சாட்சியாக முடியும்? அவனுக்கு அவனே சாட்சியாகவும் - ஏன் எதிரியாகவும் கூட ஆகிவிடலாம். இது கவிதைகளின் விதியா? அல்லது கவிஞர்களின் விதியா? அது எதுவானாலும் அஜந்தகுமாருக்கு இக்கவிதைப் படைப்பு ஒரு வெற்றிப்படைப்பு. அவன் தனது மனதின் அவலங்களுக்கு ஏதோ ஒரு வகையில் வடிகாலமைத்திருக்கிறான். அது அவனுக்கு வெற்றிதானே. அவன் வடித்த அந்த அவலங்களில் வரிக்கு வரியாக நாமும் ஏதாவது ஒன்றைத் தேடவேண்டாமா? அவனுக்கு இனிப்பாக இருந்தது, ஏன் எமக்கும் இனிக்கக்கூடாது: அவன் கசப்பு என்று ஒதுக்கியவை எமக்கும் கசப்பாக இருந்தால் அவனது வார்த்தைகளோடு நாமும் ஒன்றிப்போய் விடலாம். இல்லையேல் அவை எம்மை விட்டுத் தூர ஓடிப்போய்விடலாம். அது எதுவானாலும் அவனது வார்த்தைகளுக்குள் நாம் ஆழ நுழைந்து அவனைத் தேடவேண்டும். அப்போதுதான் நாம் எல்லோருமாகப் புதியதோர் உலகத்தினுள் புகுந்து கொள்ளலாம்.

பேராசிரியர் ம. இரகுநாதன்
தமிழ்த்துறை
யாழ் பல்கலைக்கழகம்.